THE WORLD NEEDS THE WORD
IBT
ஆகஸ்ட் 2026
மலர் 24, இதழ் 11

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# பிறக்கும்முன் தேவனால் பெயரிடப்பட்டவர்கள்



# பிறக்கும்முன் தேவனால் பெயரிடப்பட்டவர்கள்

**"கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது..." சங். 138 : 8.**

***The Lord will perfect that which concerneth me: Thy Mercy, O Lord, endureth for ever... Psalm. 138 : 8.***

நம் அன்புள்ள ஆண்டவர் தம்முடைய சாயலில் மனிதர்களைப் படைத்திருக்கிறார் என்றால் மனுமக்கள் மீது அவர் கொண்டுள்ள பாசம், அன்பு இவ்வளவு என்று சொல்ல முடியாது. எத்தனை கிலோ என்று நிறுத்திக்கூற இயலாது. ஆனால் நாம் ஆண்டவரை நேசிக்கிறோமா? பேதுருவைப் பார்த்து நீ என்னை நேசிக்கிறாயா? என்று மூன்று தரம் கேட்டார் நம் இயேசு கிறிஸ்து. நம்மையும் பார்த்து இப்போது கேட்கிறார். நாம் பதில் சொல்ல தயாராக இருக்கிறோமா? இல்லையா என்பதை நம்மை நாமே தற்பரிசோதனை செய்வோம். நம் குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தைக்கு எப்படி பெயர் வைக்கிறோம். தகப்பனுடைய பெயரின் முதல் எழுத்தைக் கொண்டு வரும் பெயராக பார்த்து வைக்கிறோம். பெற்றோர்களால் வைத்த சில பெயர்களுக்கு நம்மால் அர்த்தம் கூறமுடியாது.

**"என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது" (சங். 139 : 16).**

தாவீது ராஜாவால் எழுதப்பட்டப் பாடல். தாவீதை கர்த்தர் கண்ணோக்கினார். தாயின் கருவில் எந்த ஒரு அவயமும் (Organs) உருவாகும் முன்னதாகவே தாவீதை இஸ்ரவேலின் இரண்டாவது ராஜாவாக தமது உள்ளத்திலே எழுதிக்கொண்டார் நம் தேவன். தம்முடைய சாயலில் படைக்கப்பட்ட எல்லோருடைய கருவையும் ஆண்டவருடைய கண்கள் பார்த்துக் கொண்டும், அவயவங்களில் எந்த ஒரு குறைபாடும் ஏற்படாதவாறு கவனமாக வைத்துப் பாதுகாத்து வருகிறார்.

நம்முடைய பெயர்கள், பிள்ளைகளின் பெயர்கள், பேரப்பிள்ளைகளின் பெயர்கள் எல்லாமே பெற்றோர்களால் தேவாலயத்திலே (Baptism) ஞானஸ்நானம் மூலம் பெயர் வைக்கப்படுகிறது. பெயர் வைப்பதினால் ஆலயத்தில் நாம் ஒரு சபையின் அங்கத்தினர் (Membership) என்ற உரிமை கிடைக்கிறது.

இந்தப் பெயர் வைப்பதில் வேதாகமத்திலே ஒரு புதுமையான நிகழ்வாக – குழந்தை பிறப்பதற்கு முன்னமே தேவன் ஏழு நபர்களுக்கு பெயர் வைத்திருக்கிறார். அவர்கள் பிறந்தபின் என்னென்ன செய்வார்கள், எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்றெல்லாம் தேவனுக்குத் தெரியும். அவர்கள் யார் யாரென்றால் இஸ்மவேல், ஈசாக்கு, சாலொமோன், யோசியா, கோரேஸ், யோவான் ஸ்நானன் மற்றும் இயேசு கிறிஸ்து.

தேவன் முதன் முதலாக ஒரு மனிதனை பெயர் சொன்னது ஆதாமைத் தான் (ஆதாம்).

**"தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்..." (ஆதி. 2 : 19).**

ஆதாமை தேவன் ஒரு குழந்தையாக பிறக்கச் செய்யவில்லை. **...மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதி 2 : 7). ஆதாமைப் பொறுத்தவரை அப்பா, அம்மா, எல்லாமே தேவன்தான். தேவனைத் தவிர ஆதாம் யாரையும் பார்த்தது கிடையாது.** ஆகவே தன்னால் **உருவாக்கப்பட்ட** மனிதனுக்கு தேவனே பெயர் வைத்து, அழைத்து, செல்ல மகனாகப் பார்த்தார்.

ஆனால், குழந்தையாகப் பிறப்பதற்கு முன்னமே தேவன் ஏழு நபர்களுக்கு பெயர் சூட்டியது மனிதர்களாகிய அவர்களுக்குக் கிடைத்த பெரிய பாக்கியம். வேதாகமத்திலே எத்தனையோ

நபர்களை பெயர் சொல்லி அழைத்திருக்கிறார். ஆனால், தேவன் தாமாக பெயர் சூட்டிய நபர்களைக் குறித்து இந்த தியானப் பகுதியிலே விரிவாகக் காண்போம்.

### 1. ஆகாரின் மகனான இஸ்மவேல்

கர்த்தர் ஆகாரிடம் கூறியது என்ன? **...கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியால் அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக (ஆதி 16 : 11).**

ஆகார் ஒரு எகிப்தியப் பெண். பார்வோன் ஆபிரகாமுக்குக் கொடுத்த அடிமையாய் இருக்கலாம். எப்படியென்றால் சாராள் அழகுள்ள ஸ்திரீ (ஆதி 12 : 11) என்று அறிந்து பார்வோன் தன் அரண்மனைக்கு சாராளைக் கொண்டு வரும்படி கட்டளையிடுகிறான். ஆனால், ஆபிரகாமின் சகோதரி என்று நினைத்து ஆபிரகாமுக்கு தயை பாராட்டி, அநேக வெகுமதிகளை பார்வோன் கொடுக்கிறான்.

**சாராள் நிமித்தம் ..... ஆபிரகாமுக்கு ஆடு, மாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைகளும், ஒட்டகங்களும் கிடைத்தன (ஆதி 12 : 16).** ஆகவே ஆபிரகாம், சாராளுக்கு கொடுத்த வெகுமதிகளில் ஒன்றாக ஆகார் (வேலைக்காரி / அடிமை) வருகிறாள். சாராளுக்கு பிள்ளை பாக்கியம் இல்லாதபடியால் ஆகாரை ஆபிரகாமுக்கு மனைவியாகக் கொடுக்கிறாள். பத்து ஆண்கள் ஒரு வீட்டில் சேர்ந்து வாழ்ந்து விடுவார்கள். ஆனால் இரண்டு பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து, வாழ்வது சிரமமானதாகும். இதற்கு விதிவிலக்கான குடும்பங்களும் உண்டு. சிறிது நாட்களுக்குப் பின் சாராளுக்கும், ஆகாருக்கும் மனக்கசப்பு ஏற்படுகிறது. மிகுந்த அங்கலாய்ப்போடும், கண்ணீரோடும் ஆகார் ஆபிரகாமின் வீட்டைவிட்டு (சாராள் கடினமாக நடத்தினபடியால்) வெளியேறினாள். கர்த்தர் அவளை ஒரு நீரூற்றண்டையிலே கண்டு ஆகாரோடு உரையாடுகிறார்.

தூதன் எப்படிச் சொல்லி எகிப்தியப் பெண்ணை அழைத்தான்?

சாராயின் **அடிமைப் பெண்ணாகிய ஆகாரே!** எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய் என்று கேட்டார். ஆகாரின் பதில் என்ன? நான் என் நாச்சியாராகிய சாராயை விட்டு ஓடிப்போகிறேன் என்றாள். **ஆகாரை அவளுடைய இஷ்டத்துக்கு ஓடிப்போக கர்த்தர் விடவில்லை.** சாராயை அற்பமாக (ஆதி 16 : 4) ஆகார் நடத்தியபடியால், அதே நாச்சியாரின் வீட்டிற்குப் போகுமாறு ஆகாரிடம் கர்த்தர் கூறி, அங்கேபோய் சாராயின் கையின் கீழ் அடங்கி இரு என்றார். மேலும் **... நீ கர்ப்பவதியாய் இருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியால், அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக (ஆதி 16 : 11).**

நாம் கர்த்தர் ஒருவருக்கு மட்டுமே அடிமை. மனிதர்களாகிய எவருக்கும் நாம் அடிமை கிடையாது. காரணம், நம்மை தம்முடைய சாயலில் படைத்தது நம் ஆண்டவர். ஆகவேதான் மரியாள் தூதனிடம் என்ன கூறினாள்? **இதோ நான் ஆண்டவருக்கு அடிமை...** (லூக். 1 : 38) Mary said, “Behold the **handmaid** of the Lord”.

அடுத்ததாக, சாராயின் **கையின் கீழ் அடங்கி இரு** என்று கர்த்தர் சொன்னதின் நோக்கம் இஸ்மவேல் மூலமாக உன் சந்ததியை பெருகப் பண்ணுவேன். அது பெருகி, எண்ணி முடியாததாயிருக்கும் என்றார் (ஆதி 16 : 10). **The Angel of the said LORD to her, “I will multiply thy seed exceedingly, that it shall not be numbered for multitude (Gene. 16 : 10).**

அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய நிருபத்திலே **அடங்கி இரு** என்பதைக் குறித்து என்ன சொல்லுகிறாரென்றால் **ஏற்ற காலத்திலே தேவன் உங்களை (நம்மை) உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்தக் கைக்குள் அடங்கியிருங்கள் (I பேதுரு 5 : 6).** கர்த்தர் நம்மை உயர்த்தும்படிக்கே நமக்குப் பிரியமில்லாவிட்டாலும் அதைச் செய்யும்படி சொல்லுவார். எகிப்துக்குத் திரும்பிச் செல்லவே கூடாது என்று மோசே தன் உள்ளத்திலே ஒரு பகல் கனவாக வைத்திருந்தார். ஆனால், மீட்பின் நாயகனாக மகுடம் சூட்டி அழகு பார்க்க தேவன் விரும்பி, அவரை எகிப்திற்கு போகுமாறு அனுப்பி வைக்கிறார்.

ஆகார் என்றால் அலைந்து திரிதல் என்று அர்த்தம். பெயர் செபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள் (ஆதி 21 : 14) அதிகக் கஷ்டப்பட்டு தன் மகனான இஸ்மவேலை வளர்த்தாள். கர்த்தர் இடைப்பட்டு இருவரையும் காத்துக் கொண்டார். கர்த்தரின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து நடப்போமாக. அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதின நிருபத்திலே வேலைக்காரர் .... தேவனுடைய உபதேசத்தை .... அலங்கரிக்கத்தக்கதாக தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்து, எதிர்த்துப் பேசாமல் ... நடந்து கொள்ள வேண்டும் (தீத்து 2 : 9, 10). கர்த்தர் செல்லும் பாதையிலே அடங்கி நடப்போமாக.

## 2. ஆபிரகாமின் மகனான ஈசாக்கு

**அப்பொழுது தேவன்: உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக... (ஆதி 17 : 19) என்றார்.**

தேராகுக்கு மூன்று மகன்கள். ஆபிராம், நாகோர், ஆரான். இந்த மூன்று பேரில் ஆபிராம் மூத்தவர். ஆபிராமுக்கு எழுபத்தைந்து (ஆதி 12 : 14) வயதாயிருக்கையில் கர்த்தர் ஆபிராமுடன் பேசி ஊர் என்ற கல்தேயர் தேசத்து பட்டணத்தை விட்டு தாம் காண்பிக்கும் தேசத்துக்குப்போ என்று கூறினார். ஆபிராம் கானான் தேசத்தை இதற்கு முன் பார்த்தது கிடையாது. எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் தேவன் சொன்ன வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து போனார்.

**விசுவாசத்தினால் நீதிமானாவதற்கு முதலாவது எடுத்துக் காட்டு ஆபிரகாம்தான்.** ஆபிரகாம் ஒரு நாள் ஆண்டவரை நோக்கி கர்த்தாவாகிய ஆண்டவரே அடியேனுக்கு என்ன தருவீர், நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே, தேவரீர் எனக்கு புத்திர சந்தானம் அருளவில்லை என்றான். அப்பொழுது அவர், ஒரு உற்பவ காலத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன். அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார்.

சாராள் தன் உள்ளத்திலே நகைத்து நான் கிழவியும், என் ஆண்டவன் (ஆபிரகாம்) முதிர் வயதுள்ளவருமான பின்பு எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ. காரணம் ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்று போயிற்று. கர்த்தர் ஆபிரகாமிடம் இறுதியாகக் கூறியது "**கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ**" என்றார்.

அதன்பின் கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும் அவைகளின் பாவம் கொடிதாயிருப்பதினாலும் கர்த்தர் இறங்கிப் போய் என்னிடத்தில் வந்து எட்டின அதன் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார்.

ஆபிரகாமோ கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான். ஆபிரகாம் கர்த்தருக்கு சமீபமாய்ச் சேர்ந்து துன்மார்க்கனோடு நீதிமானையும் சேர்த்து அழிப்பீரோ என்று கேட்டு ஐம்பது நீதிமான்களில் ஆரம்பித்து பத்து நீதிமான்கள் வரை பேசினான். அதற்குக் கர்த்தர், பத்து நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார். அதன்பின் கர்த்தர் ஆபிரகாமிடம் கூறியதுபோல் லோத்தின் மீது வைத்திருந்த இரக்கத்தினாலே அவன் மனைவியின் கையையும், அவன் (லோத்து) இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து பட்டணத்துக்கு வெளியே கொண்டு போய் தூதர்கள் விட்டார்கள்.

ஆரானின் மகன் லோத்து, ஆபிரகாமின் இரண்டாவது தம்பியின் மகன். ஆகவே, ஆபிரகாமுக்கும் லோத்து மகன் உறவுதான். லோத்துக்கு ஒரு கஷ்டம் என்றால் அதை ஆபிரகாமால் தாங்கிக் கொள்ள முடியாது. தன் சகோதரனாகிய லோத்து சிறையாகக் கொண்டு போகப்பட்டதை ஆபிரகாம் கேள்விப்பட்ட போது, தன் வீட்டிலுள்ள முன்னூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதம் தரித்து பகைவர்களை பின்தொடர்ந்து துரத்தி, லோத்தையும், அவனுடைய பொருட்களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக் கொண்டு வந்தான் (ஆதி 14 : 16), பார்த்தீர்களா? தன்னுடைய சகோதரன் ஒரு கஷ்டத்திலே அகப்பட்டிருக்கிறான் என்று கேள்விப்பட்ட மாத்திரத்தில் ஆபிரகாம் தான் ஒரு செல்வச் சீமான், என்பதை முதலாவதாக மறந்தான். தன் சகோதரன் குடும்பத்தையும்,

உடமைகளையும் மீட்டு வர வேண்டும் என்ற ஒரே குறிக்கோளைக் கொண்டிருந்தான். எந்த ஒரு போர் அனுபவமும் இல்லாத முதல் முற்பிதா செய்த காரியம் நமக்கெல்லாம் ஒரு பாடம். நம் உடன் பிறந்தவர்களுக்கு விரோதமாக பட்டயத்தை எடுக்கிறோமா, அல்லது அவர்கள் மீது அன்பு செலுத்துகிறோமா என்று யோசனை செய்வோம்.

காலங்கள் கடந்தன. கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடியே சாராள் மீது கடாட்சமானார். கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்கு செய்தருளினார். இப்போது சாராளுக்கு தொண்ணூறு வயது. ஆபிரகாமுக்கு நூறு வயது. இஸ்மவேலுக்கு பதினான்கு வயது. ஆபிரகாம் முதிர் வயதாயிருக்கையில் சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். அப்பொழுது ஆபிரகாம் தனக்குச் சாராள் பெற்ற குமாரனுக்கு ஈசாக்கு என்று பேரிட்டான்.

**ஈசாக்கைப் பற்றியது: தியானம் செய்ததாக வேதாகமத்தில் கூறப்பட்ட ஒரே நபர். ஈசாக்கு என்றால் நகைப்பு என்று அர்த்தம்.** பல பெண்களை திருமணம் செய்யும் வழக்கம் இருந்த காலத்தில் ஒரு மனைவியுடன் ஒழுக்கமாக வாழ்ந்த உத்தமர். பரம தேசத்தை விரும்பியதால் கானான் தேசத்தில் நகரத்தையோ, வீட்டையோ கட்டவில்லை. **பிறப்பதற்குமுன் தேவனால் பெயரிடப்பட்ட இரண்டாவது நபர்.**

## 3. தாவீதின் மகன் யெதிதியா

தாவீதுக்கு பத்சேபாள் ஒரு குமாரனைப் பெற்றாள். தாவீது அவனுக்குச் சாலொமோன் என்று பேரிட்டான். கர்த்தர் – தீர்க்கதரிசியாகிய நாத்தானை அனுப்ப அவன் கர்த்தரின் நிமித்தம் அவனுக்கு **யெதிதியா** என்று பேரிட்டான் (2 சாமு 12:24,25).

தாவீதின் மகனுக்கு இரண்டு பெயர்கள். **தகப்பனாகிய தாவீது வைத்த பெயர் சாலொமோன். கர்த்தர் வைத்த பெயர் யெதிதியா.** ஈசாக்கின் இரண்டாவது மகனுக்கு இரண்டு பெயர்கள். **பெற்றோர் வைத்த பெயர் யாக்கோபு. கர்த்தர் வைத்த பெயர் இஸ்ரவேல்.** இப்படி தேவனால் பெயர் வைக்கப் பெற்றவர்கள் பெரும் பாக்கியவான்கள். தாவீதுக்கு எத்தனையோ மகன்கள் இருந்தாலும் கர்த்தர் நேசித்த மகன் சாலொமோன். அதனால்தான் கர்த்தர் அவனுக்கு செல்லமாக ஒரு பெயர் வைத்தார்.

**தாவீதென்றால் அன்புக்குரியவர் அல்லது நேசர் என்ற பொருள் தரும்.** தாவீதுக்கு அநேகப் பெயர்கள் உண்டு. மேய்ப்பர், இசைக் கலைஞர், போர் வீரர், தீர்க்கதரிசி, புலவர், அரசர் போன்ற பெயர்கள் தாவீதுக்கு உரியது. தாவீதின் உடன் பிறப்புகள் ஏழு சகோதரர்கள். தேவனைப் பற்றிய வைராக்கியமும், விசுவாசத்தால் வந்த தைரியமும் கொண்டு கோலியாத்தை (பெலிஸ்தன்) எதிர்த்து போர் செய்தவர். தாவீது, அது மட்டுமல்ல இன்னும் எத்தனையோ போர்களை மேற்கொண்டவர். எல்லாவற்றிலும் தேவன் அவரோடு இணைந்து இருந்தக் காரணத்தால் போகும் இடத்திலெல்லாம் வெற்றியைக் கண்டார். அநேக வாத்தியக் கருவிகளின் துணை கொண்டு பாடின அநேக பாடல்களால் கர்த்தர் மீது தாவீது கொண்ட அன்பை வெளிப்படுத்தினார். எப்ரோனிலே ஏழு வருடம் ஆறுமாதமும் அரசராக இருந்தார். எருசலேமில் முப்பத்தி மூன்று வருஷம் இஸ்ரவேல் மக்களை நியாயம் விசாரித்தார். மொத்தம் 7.6 + 33 = 40.6 வருடங்கள் மக்களுக்காக பாடுபட்ட அற்புத அரசர். அவருக்குப் பிறந்த பிள்ளைகள் இவ்வளவு (எண்ணிக்கை) என்று சரியாகச் சொல்ல முடியாது.

**தாவீதுக்கு எப்ரோனில் பிறந்த பிள்ளைகள் (1 நாளா 3:1–3)**

1. அகிநோவாமிடத்தில் பிறந்த அம்னோன், 2. அபிகாயேலிடத்தில் பிறந்த கீலேயாப், 3. மாக்காள் பெற்ற அப்சலோம், 4. ஆகித் பெற்ற அதோனியா, 5. அபித்தாள் பெற்ற செப்பத்தியா, 6. எக்லாள் பெற்ற இத்ரேயாம்.

## எருசலேமில் பிறந்த பிள்ளைகள்

பத்சேபாளிடத்தில் பிறந்த சிமீயா, சோபாப், நாத்தான், சாலொமோன் என்பவர்கள் போக இன்னும் ஒன்பது பேர் பிறந்தார்கள். மேலும் மறுமனையாட்டிகள் மூலமாக பிறந்தவர்கள் அநேகர். ஒரே ஒரு மகள் தாமார். இவர்களின்

பெயர்கள் எல்லாம் பெற்றோரால் பெயரிடப்பட்டது. இத்தனை மனைவிகளுடன் வாழ்வது பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தவறாக கருதப்படவில்லை.

காலங்கள் மாறின. ராஜாக்கள் எல்லோரும் போருக்குச் செல்ல வேண்டிய நேரம் வந்த போது தாவீது ராஜா மட்டும் எருசலேமிலே தங்கி விட்டார். ஒருநாள் உப்பரிகையின் மேல் உலாவிக் கொண்டிருக்கும்போது, ஸ்நானம் பண்ணிக் கொண்டிருந்த ஒரு சௌந்தரவதியான பெண்ணைப் பார்த்து, அரண்மனைக்கு அழைத்து வருமாறு காவலரை அனுப்பினார். அவள் பெயர் **பத்சேபாள்.** உரியாவின் மனைவி. யுத்தம் பலமாக நடந்து கொண்டிருந்த சமயம் யுத்தத்திலே தாவீது ராஜாவின் சுயநலமான சொல்லால் உரியா போர்க்களத்திலே செத்தான். அதன்பின் பத்சேபாள் தாவீதின் அரண்மனையில் வந்து தங்கினாள். அவள் தாவீதுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். அந்தக் குழந்தையைக் கர்த்தர் அடித்தார், அது செத்துப்போயிற்று.

அதன்பின் பத்சேபாள் இரண்டாவதாக தாவீதுக்கு ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். அவனுக்குச் சாலொமோன் என்று தாவீது பேரிட்டான். **சாலொமோன் என்றால் சமாதானம் என்று அர்த்தம்.** கர்த்தர் அவன் பேரில் அன்பாயிருந்தார் (2 சாமு 22 : 24) கர்த்தர் தன் உள்ளத்தினால் அவனுக்கு ஒரு பெயரை வைக்க ஆசைப்பட்டு, தீர்க்கதரிசியாகிய நாத்தானை அனுப்பி அவன் கர்த்தரின் நிமித்தம் அவனுக்கு **யெதித்யா** என்று பேரிட்டான்.

## யெதித்யா பற்றி வேதாகமம் கூறுவது

**யெதித்யா என்றால் கர்த்தருக்குப் பிரியமானவன் என்று அர்த்தம்.** கர்த்தருக்குப் பிரியமாயிருந்து, கர்த்தரை தரிசித்து, கர்த்தரிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொண்டார். உலகின் மிகச் சிறந்த ஞானி. தனது தந்தையும், தேவனும் விரும்பியபடி தேவாலயத்தைத் திறமையாகக் கட்டினார். இவரது தேவாலயத் திருப்பொழிவு வேண்டுதல் மிகவும் சிறந்தது. அக்கினி இறங்கி, கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று. நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதபாட்டு என்ற புத்தகங்களும் யெதித்யா நமக்காக எழுதினார். வாசித்து ஞானத்தைப் பெற்றுக் கொள்வோம்.

## 4. ஆமோனின் மகனான யோசியா

**...தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்... (1 இரா. 13 : 2).**

ஆமோனின் குமாரன் பிறப்பதற்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே இவரது பெயரும் இவரது செயல்களும் கர்த்தரால் ஒரு தீர்க்கதரிசியின் மூலம் முன்னறிவிக்கப்பட்டது. இதோ தேவனுடைய மனுஷன் ஒருவன் கர்த்தருடைய வார்த்தையின் படியே யூதாவிலிருந்து பெத்தேலுக்கு வந்தான். யெரொபெயாம் அப்போது தான் பெத்தேலில் கட்டின பலிபீடத்திற்கு தூபம்காட்ட பலிபீடத்தண்டையில் நிற்கையில் கர்த்தருடைய தீர்க்கன் பலிபீடத்தை நோக்கி, பலிபீடமே! பலிபீடமே! இதோ தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான். அவன் (யோசியா) உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான். மனுஷரின் எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்கப்படும். இதோ நீ தூபங்காட்டுகிற இந்த பலிபீடம் வெடித்து, அதன்மேலுள்ள சாம்பல் கொட்டுண்டுபோம். கர்த்தர் உரைத்ததற்கு இதுவே அடையாளம் என்றான். அந்த தேவனுடைய மனுஷன் சொன்னபடியே நடந்தது. அப்போது ராஜாவாகிய யெரொபெயாம் அவனைப் (தேவனுடைய மனுஷன்) பிடியுங்கள் என்று கூறி, **தன் கையைப் பலிபீடத்திலிருந்து நீட்டினான்.** தேவனுடைய மனுஷனுக்கு விரோதமாய் நீட்டின கை **தன்னிடமாக முடக்கக்கூடாதபடிக்கு மரத்துப் போயிற்று.** பலிபீடம் வெடித்துச் சிதறியது.

யெரொபெயாம் கர்த்தருடைய மனுஷனை நோக்கி, என் கை முன்போலிருக்கும்படிக்கு நீ **உன் தேவனாகிய** கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணும்படி வேண்டினான். அப்போது தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய சமுகத்தில் வேண்டினான். ராஜாவின் கை முன்னிருந்தது போல் சீர்ப்பட்டது. **நாம் யாருக்கு விரோதமாகவும் கைநீட்டி பேசக்கூடாது.**

மிரியாம் மோசேக்கு விரோதமாகப்

பேசினபோது, உறைந்த மழையின் வெண்மை போன்ற குஷ்டரோகியானாள் (எண் 12 : 10). தேவனுடைய மனுஷர்களுக்கு விரோதமாகப் பேசினால் தண்டனை உண்டு.

**யோசியாவைப் பற்றி :** எட்டு வயதில் அரியணை ஏறி, முப்பத்தோரு வருடம் எருசலேமில் அரசாண்டான். சிறுவயது முதல் கர்த்தரைத் தேடினார். தனது பொறுப்பில் தேசத்திலிருந்த தவறான கொள்கைகளை முற்றிலும் அகற்றினார். எருசலேம் ஆலயத்தைப் பழுதுபார்க்க ஏற்பாடு செய்தார். நியாயப்பிரமாண நூல் தேவாலயத்தில் கண்டெடுக்கப்பட்டதும் அதைத் தெரிந்து கொள்வதற்கென முற்றிலும் வாசிக்கச் செய்தார். கர்த்தருடைய வசனத்தின்படி தன்னுடைய நாட்டு மக்களும் நடக்குமாறு செய்தார். பெண் தீர்க்கதரிசி (உல்தாள் - 2 இரா. 22 : 14) வாயிலாக கர்த்தரிடம் ஆலோசனைக் கேட்டார்.

**முக்கியமான வசனம் (2 இரா. 22 : 2)**

**யோசியா கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளிலெல்லாம் வலது, இடது புறம் விலகாமல் நடந்தான்.**

கர்த்தரைப் பின்பற்றும்படி நமது குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டும். அப்படிச் செய்தால் பிற்காலத்தில் கர்த்தருக்கென்று அவர்கள் முக்கியமான ஊழியங்களைச் செய்யக்கூடும். இவ்விதமாக வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒரே அரசர் யோசியா மட்டும் தான்.

## 5. பாரசீக மன்னன் மகன் கோரேஸ்

**கோரேசைக் குறித்து கர்த்தர் கூறுவது :** ஏசாயா 44 : 28, 45 : 1-6 கோரேஸ் என் மேய்ப்பன். அவன் எருசலேமை நோக்கி நீ கட்டப்படு என்றும், தேவாலயத்தை நோக்கி நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான் (கர்த்தர்). உன்னை பெயர் சொல்லி அழைத்து நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு நாமம் (பெயர்) தரித்தேன்.

எகிப்தின் ராஜா - பார்வோன், எருசலேம் ராஜா - ஏரோது. ரோமர்கள் - சீசர், பாரசீக அரசன் - கோரேஸ்.

கோரேஸ் அரசர் பிறப்பதற்கு ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு அவரைக் குறித்து மிகவும் தெளிவான தீர்க்கதரிசனத்தை ஏசாயாவின் மூலம் கர்த்தர் தந்தருளினார். கோரேசை அரசராகவும், தாம் கூறின யாவற்றையும் செய்யவும் கர்த்தர் அபிஷேகம் பண்ணினார். (நான் (கர்த்தர்) அபிஷேகம் பண்ணின கோரேஸ் - ஏசா. 45 : 1).

உலக மக்களை மனந்திரும்பச் செய்ய அபிஷேகம் தேவை. கர்த்தரிடம் கேட்டு பெற்றுக் கொண்டு ஆத்தும ஆதாயப் பணி செய்வோமாக.

ஒரு மனிதன் பிறப்பதற்கு முன்னமே அவனது பெயரையும், அவன் செய்யப்போகிற காரியங்களையும் சரியாக முன்னறிவிக்கக் கூடியவரே உண்மையான தேவன். நம்மைப் பற்றியும், நாம் பிறக்கும் முன்பே அவர் அறிந்திருக்கின்றார்.

ஏசாயா தீர்க்கதரிசியால் எழுதப்பட்டிருப்பதை கோரேசுக்கு யூதர்கள் காண்பித்தனர் என்றும், அதை வாசித்து ஆச்சரியமடைந்த கோரேஸ் அரசர் அதன்படியே யூதர்களை விடுவித்தார் என்றும் கூறப்படுகிறது. கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி பெர்சியா (பாரசீகம்)வின் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருடத்திலே கர்த்தர் தன்னிடம் என்ன கூறினார் என்று 2 நாளா 36 : 22, 23 வசனங்களிலே கூறுகிறார்.

பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டுவிக்கும்படி எனக்கு கட்டளையிட்டிருக்கிறார். ஆகவே, அவருடைய ஜனங்கள் எல்லோரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும். அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருப்பாராக என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று தன் ராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணினான்.

கர்த்தர் சொன்னபடியே நேபுகாத்நேச்சாரால் கொண்டு வரப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் 70 வருடங்கள் கழிந்து பெர்சியாவின் அரசர் கோரேசின் காலத்தில் தேவாலயப்பணிக்கென்று மீண்டும் எருசலேமுக்கு வருவதற்கு, பிறப்பதற்கு முன்பே பெயரிடப்பட்ட கோரேசின் உத்தரவினால் / கட்டளையினால் தேவனுடைய ஜனங்கள் வந்து சேர்ந்தனர்.

இயேசு பாலகனைக் காண வானியல் வல்லுநர்கள் எருசலேமுக்கு கிழக்கில் இருந்த நாடுகளில் பாரசீகம், இந்தியா, சீனா ஒன்றான பாரசீகத்திலிருந்து பல ஆயிரம் கிலோமீட்டர்கள் பயணம் செய்து வந்தனர். எல்லோருக்கும் / சகல ஜனங்களுக்கும் விடிவெள்ளியின் நாயகனாக இயேசு பாலகன் பிறந்தார். அதேபோல் பாரசீக அரசனான கோரேசால் யூதர்கள் எல்லோருக்கும் ஒரு விடுதலை பெறப்பட்டு பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

கர்த்தருடைய கிருபைக்காக நாம் காத்திருத்தல் நல்லது. நாமும் நம்முடைய வாழ்க்கையிலே ஆண்டவருக்கென்று ஏதோ ஒரு விதத்தில் அருட்பணி செய்வோமாக!

## 6. சகரியாவின் மகன் யோவான் ஸ்நானன்

**...சகரியாவே பயப்படாதே... உன் மனைவியாகிய எலிசபெத்து, உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக (லூக்கா.1:13).**

அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் சகரியா என்னும் பெயர் கொண்ட ஆசாரியன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி. அவள் பேர் எலிசபெத்து. அவர்கள் இருவரும் கர்த்தரிடம் சகல கற்பனை மற்றும் நியமங்கள் எல்லாவற்றிலும் குற்றமற்றவர்களாய் நடந்தார்கள். தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்.

ஆபிரகாம், சாராளைப் போல் வயது சென்றவர்களாயிருந்தார்கள். எலிசபெத்து மலடியாயிருந்தபடியால் அவர்களுக்கு பிள்ளையில்லாதிருந்தது. சகரியா ஆசாரிய ஊழியம் செய்தபடியால் தூபம் காட்ட, சீட்டைப்பெற்று தேவாலயத்திற்குள் பிரவேசித்து தூபம் காட்ட முற்பட்டபோது, (ஜனங்கள் எல்லோரும் வெளியே ஜெபம் செய்து கொண்டிருந்தார்) கர்த்தருடைய தூதன் ஒருவன் பீடத்தின் வலது பக்கத்திலே நின்று தரிசனமானான்.

சகரியா பல ஆண்டுகளாக குழந்தைக்காகச் செய்த வேண்டுதல்களையெல்லாம் கேட்ட தேவன் சகரியாவின் **முதிர் வயதிலே பதில் அளித்தார். நமது ஜெபங்களுக்கும், வேண்டுதல்களுக்கும் கர்த்தர் தாமதமாக பதில் அளிப்பதுண்டு. விசுவாசத்தோடு காத்திருந்து பதில் பெற்றுக் கொள்வோமாக.** தேவன் அருளின வாக்குறுதிகள் அவர் நியமித்துள்ள சரியான வேளையில் நிச்சயம் நிறைவேறும்.

பலிபீடத்தின் முன் தூபம் காட்டுவது என்பது சாதாரண காரியம் கிடையாது. ஆசாரிய குலத்தில் பிறந்திருக்க வேண்டும். எலிசபெத்து லேவி கோத்திரத்தில் பிறந்தவள். ஆகவே ஆலயத்தில் தூபம் காட்டும் வேலையானது சகரியாவுக்குக் கிடைத்தது. திடீரென்று தூதனைக் கண்டவுடன் சகரியா பயந்திருப்பார். எப்படி இயேசுவானவர் சகேயுவைப் பார்த்து இறங்கிவா என்று கூறிய போது சகேயு பயந்ததைப் போல் சகரியா காணப்பட்டிருக்கலாம். சகரியாவின் உள்ளம் கலங்கிப் போனது.

## தூதன் கூறியது என்ன?

சகரியாவே, பயப்படாதே. குழந்தைக்காக நீ செய்த வேண்டுதல் (பல ஆண்டுகளாக) கேட்கப்பட்டது. அவன் பிறப்பின் நிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள். ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தால், அக்குழந்தையால் பெற்றோருக்கும், உற்றார் உறவினருக்கும் மட்டுமே சந்தோஷம், ஆனால் யோவான் பிறப்பதற்கு முன்பே தேவ தூதனால் சகரியாவுக்கு அக்குழந்தையைக் குறித்து சாட்சி சொல்லப்பட்டது. அநேகர் சந்தோஷப்படுவார்கள். எலிசபெத்தின் வயிற்றில் இருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான் (லூக். 1 : 14 – 17) என்று கூறப்பட்டது. தூதனின் வார்த்தையைக் கேட்ட பின்பு

சகரியாவுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. இதை நான் எதினால் அறிவேன் என்று கேட்டதற்கு, காபிரியேலான என்னுடைய வார்த்தையை விசுவாசியாதபடியால் இந்தக் காரியங்கள் எல்லாம் நடக்கும் வரைக்கும் ஊமையாய் இருப்பாய். அதுவே அடையாளம் என்று தூதன் கூறிவிடுகிறான். ஆலயத்தில் தேவ சந்நிதியில் நடந்த அனைத்து காரியங்களையும் வீட்டிற்கு வந்து பலகையில் எழுதி எலிசபெத்திடம் சகரியா காட்டியிருக்கலாம். யோவான் பிறந்த போது (லூக். 1 : 60) அவன் தாய் அதற்கு யோவான் என்று பேரிட வேண்டும் என்றாள். சகரியாவும் எழுத்துப் பலகையை வாங்கி இவன்பேர் யோவான் என்று எழுதினான்.

**<u>யோவான் ஸ்நானனின் நற்பண்புகள்</u>**

1. ஸ்தீரிகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை என்று கிறிஸ்துவால் சாட்சி பெற்றவர்.

2. தூய்மையாக மட்டுமின்றி எளிமையாகவும் வாழ்ந்தார்.

3. எளிய உடை, எளிய உணவு, வனாந்தரத்தில் காத்திருத்தல் போன்ற சிறப்பான குணங்கள் மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது.

4. கிறிஸ்துவிடம் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற விரும்பினார்.

5. கிறிஸ்துவை அடையாளம் காட்டும் வரை நீர் யார்? என்று கேட்டவர்களுக்கு நான் கிறிஸ்து அல்ல என்று பதிலுரைத்தார். அந்த அளவிற்கு இவரது முழு நோக்கம் / சிந்தனை / எண்ணம் எல்லாமே கிறிஸ்துவைப் பற்றியே இருந்தது. இவர், கிறிஸ்துவை விட 6 மாதம் பெரியவர்.

6. நான் சிறுகவும் அவர் பெருகவும் வேண்டுமென்று விரும்பினார். எப்போதும் தன்னைப் பற்றி தாழ்மையாகவே பேசினார்.

7. இரத்த சாட்சியாக மரித்தார்.

## <u>7. யோசேப்பின் (வளர்ப்பு தந்தை) மகன் இயேசு கிறிஸ்து</u>

**<u>காபிரியேல் மரியாளிடம் கூறியது:</u>**

**இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக (லூக்.1 : 31).**

**<u>காபிரியேல் யோசேப்பிடம் கூறியது:</u>**

கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே மரியாள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்றபோது, யோசேப்பு அவருக்கு இயேசு என்று பேரிட்டார்.

**பிறப்பதற்கு முன்பே கர்த்தரால் பெயரிடப்பட்டதாக வேதத்தில் எழுதப்பட்டுள்ள ஏழாவது நபர் இயேசு.** எபிரேய மொழியில் யோகோசுவா அல்லது யெஷ்வா என்றும், கிரேக்க மொழியாக்கத்தில் இயேசு என்றும் உச்சரிக்கப்படும் இப்பெயரின் பொருள் யேகோவா – இரட்சிக்கிறார் என்று பொருள் படும்.

**<u>இரட்சிக்கிறார் – அர்த்தம்:</u>**

இரட்சிப்பு என்பது பாவங்கள், ஆபத்துக்கள், நோய்கள், மனக்கலக்கம், போராட்டம், மோசமான நிர்வாக நிலைமை போன்றவற்றின்று காப்பாற்றுவதைக் குறிக்கின்றது. மனிதன் தன்னைத்தானே இரட்சிக்க முடியாது. நமது பாவ சுபாவத்தை மாற்ற நம்மால் இயலாது. இயேசு கிறிஸ்து ஒருவரே இரட்சகர். நம்மைத் தாழ்த்தி, அவரது இரட்சிப்பை நன்றியுடன் பெற்று கொள்வோமாக.

ஏசாயா 7 : 14 – **...இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.**

கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசனம் இந்த வசனம். இதன் நிறைவேறுதல் மத்தேயு 1 : 18-25, லூக். 1 : 26-37, லூக். 2 : 1-7 ஆகிய பகுதிகளில் எழுதப்பட்டுள்ளது.

இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று பொருள். தேவனைத் தேடுகிற ஒவ்வொருவரோடும் அவர் இருக்கிறார். நம்முடைய எல்லா நிலைகளிலும் அவர் துணையாக இருக்கிறார் என்ற உணர்வோடு வாழ வேண்டும்.

வேத வாக்கியம் மற்றும் தீர்க்கதரிசனம் நிறைவேற நம் ஆண்டவரை பாலகனாக பிறக்கச் செய்த கர்த்தரின் அன்புக்கு முன்பாக எல்லாமே எடுபட்டுப் போகும்.

*கர்த்தர் சிநேகம் சுதனை ஈந்தார்;*
*அவர் சிநேகம் இரட்சிக்கின்றார்,*
*நான் மீண்டும் சொல்லுவேன்;*
*அவர் சிநேகம் சிநேகமே.*

<u>பெத்லகேமில் பிறந்த விடிவெள்ளி:</u>

மிகவும் கடினமான சூழ்நிலையில் யோசேப்பு குடிமதிப்பு எழுத மரியாளை அழைத்துக் கொண்டு வருகிறார். அப்போது மரியாளுக்குப் பிரசவ நேரம் வந்து, தன் முதற்பேறான மகனைத் துணியிலே சுற்றி முன்னணையிலே கிடத்தினாள்.

<u>மீகாவின் சாட்சி (மீகா 5 : 2, மத். 2 : 6)</u>

**எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்... (மீகா. 5 : 2)**

<u>மத்தேயுவின் சாட்சி:</u>

**யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார்... (மத். 2 : 6).**

<u>மேய்ப்பர்களிடம் தூதன் சாட்சி:</u>

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

**தீர்க்கன்களின் தீர்க்கதரிசனம் நிறைவேறியது. தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றான். லூக். 1 : 37**

கிறிஸ்து பிறந்தார் என்பதற்கு **முதல் சாட்சி மேய்ப்பர்கள்.** பெத்லகேம் ஊருக்குப் போய் கர்த்தரால் தங்களுக்கு அறிவிக்கப்பட்டபடி தீவிரமாய் வந்து மரியாளையும், யோசேப்பையும் முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்.

<u>குழந்தையைப் பார்க்க வந்தவர்கள்:</u>

குடிமதிப்பு எழுத வந்த ஜனங்கள், வான சாஸ்திரிகள், பரம சேனையின் திரள், எல்லோரும் தங்களாளான வெகுமதிகளைக் கொண்டு வந்தனர். சிமியோன் மிகப்பெரிய சாட்சி. பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ண வேண்டிய எட்டாம் நாளிலே அது கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்கு முன்னே தேவ தூதனால் சொல்லப்பட்டபடியே அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள். லூக். 2 : 21.

<u>**இயேசு கிறிஸ்துவைப் பற்றி**</u>

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார். தன் தகப்பனுக்கு உதவியாக தச்சு வேலை செய்தார். கிறிஸ்துவின் ஊழியம் 3.5 ஆண்டுகள். அவருடைய பணியில் 12 சீடர்களை தன்னோடு இணைத்துக் கொண்டார். எங்கே சென்றாலும் தமது சீடர்களுடன் செல்வார். அநேக அற்புதங்களையும், அதிசயங்களையும், அடையாளங்களையும் செய்தார். பார்வை இல்லாதவர்களுக்கு பார்வை கொடுத்தார். கானானியப் பெண்ணின் விசுவாசத்தைக் கண்டு அவள் மகளுக்கு சுகம் நல்கினார். தன்னைக் காண வேண்டும் என்று விரும்பிய சகேயுவுக்கு அவன் இருந்த இடம் தேடிச் சென்று தன்னை வெளிப்படுத்தினார். மரித்த லாசரு மற்றும் நாயீன் ஊர் விதவையின் மகனை உயிரோடு எழுப்பிக் கொடுத்தார். இன்னும் எத்தனையோ அதிசயங்களைச் செய்திருக்கிறார். இவையெல்லாமே அவருடைய சீடர்கள் முன்னிலையில் நடத்தப்பட்டன.

இப்படிப்பட்ட நம் கர்த்தரை சீடர்களில் ஒருவனான யூதாஸால் காட்டிக் கொடுக்கப்பட்டார்.

நமக்காகவும், நமது மீட்புக்காகவும், இரட்சிப்புக்காகவும் கல்வாரி வரை சென்று பல பாடுகள், தலையில் முள் கிரீடம் சூட்டப்பட்டு, கைகள், கால்களில் ஆணிகளால் கடாவப்பட்டு ஐங்காயங்கள் பட்டு சிலுவையில் அறையப்பட்டார். தாம் சொன்னபடியே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இந்த பூலோகத்திலே எத்தனையோ கோடி மக்கள் மரித்திருக்கிறார்கள். ஆனால், ஒருவரும் உயிரோடு உயிர்த்தெழவில்லை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டுமே உயிர்த்தெழுந்து, பிதாவின் வலது பாரிசத்தில் நின்று நமக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். ஜீவனுள்ள தேவாதி தேவனாம் நம் கர்த்தரை எல்லா நிலையிலும் தொழுது கொள்வோம். அவருடைய பிள்ளையாக நம்மை வைத்திருப்பதற்கு நன்றி செலுத்துவோம். பாடல்களால் துதிப்போம். அவருக்கு பிரியமான பாதையில் சென்று, நற்செய்திப் பணியாளர்களாக மாறுவோம். ஆமென்!

– திருமதி. குயிலிராஜா

# ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான, அன்பான சகோதர, சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**“கர்த்தாவே, உமது தேசத்தின் மேல் பிரியம் வைத்து, யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பினீர்” (சங். 85 : 1).**

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் 400 வருடங்களாக அடிமைகளாயிருந்தார்கள். பின்பு கர்த்தர் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, மோசேயைக் கொண்டு அவர்களை வழிநடத்தி, கானான் தேசத்தை சுதந்தரிக்கச் செய்தார். அந்த தேசத்திலே அவர்களை நாட்டி பலுகிப் பெருகச் செய்தார். ஆரம்ப நாட்களிலே கர்த்தருக்கு பிரியமாய் நடந்த ஜனங்கள், பின்நாட்களில் ஆண்ட ராஜாக்களின் காலத்திலே துணிகரமான பாவங்களுக்கு உட்பட்டு தேசத்தை தீட்டுப்படுத்தினார்கள். அதினிமித்தம் தேவ கோபமும், நியாயத்தீர்ப்பும் இஸ்ரவேல் மேல் வந்தது. பாபிலோன் தேசத்திற்கு அவர்களை சிறைப்பட்டு போகப் பண்ணினார். 70 வருட காலமாய் இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்திலே அடிமைகளாயிருந்தார்கள். பின்பு கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் மனதுருகி, அவர்களை மீண்டும் சொந்த தேசத்திற்குத் திரும்பி வரப்பண்ணினார்.

நம்முடைய பாரத தேசமும் ஆங்கிலேயருடைய ஆட்சி காலத்திலே ஏறக்குறைய 190 ஆண்டுகள் அவர்களுக்கு அடிமைகளாயிருந்தது. பின்பு அநேக சுதந்திரப் போராட்ட வீரர்களால் நம்முடைய தேசத்திற்கும் ஆங்கிலேயரிடமிருந்து 1947-ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைத்து 79 ஆண்டுகளானாலும், சட்டம் அனைவருக்கும் உரிமைகள் அளித்தாலும், நடைமுறையில் சமூக ரீதியாக சாதி, மதம், பிராந்தியம் போன்ற அடிப்படைகளில் அவை எல்லாருக்கும் சமமாகக் கிடைக்கிறதா? என்பது கேள்வியாகவே உள்ளது. நம் தேசத்திலே உள்ள அநேக ஜனங்கள் இன்னும் பல பாவ பழக்கங்களிலும், மூட நம்பிக்கையிலும் அடிமைப்பட்டுத்தான் உள்ளனர். அவர்களும் தங்களுடைய பாவத்திலிருந்து விடுதலையாகி, இரட்சிக்கப்படவேண்டுமென்பதே பிதாவின் சித்தமாயிருக்கிறது. யார் இரட்சிக்கப்படுவார் என்று வேதம் சொல்கிறது? **கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் (ரோமர். 10 : 13). அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்?...**

நம் இந்திய தேசமெங்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்து ஜனங்களை பாவத்தின்

அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, பரலோக ராஜ்யத்தில் பங்கு உள்ளவர்களாய் மாற்ற பிரயாசப்படும் ஊழியங்களுக்கு உங்களால் முடிந்த பொருளாதார உதவியாலும், ஜெபத்தினாலும் தாங்கி, பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற பிரயாசப்படுவோமாக.

**ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவான் 8:36).**

கடந்த ஜுன் மாதம் 14–ஆம் தேதியன்று கோவையிலுள்ள திருச்சி ரோடு, C.S.I. கிறிஸ்து நாதர் ஆலயத்தில் மிஷனெரி ஞாயிறு அனுசரிக்கப்பட்டது. இந்த சபையின் மூலமாக மிஷனெரிகள் தாங்கப்படும் ஊழியங்களும், இச்சபை மக்கள் சிலரும் ஸ்டால்கள் அமைத்து, இதினால் வரும் வருவாயைக் கொண்டு வடமாநிலத்தில் இரு ஆலயங்கள் கட்ட உபயோகப்படுத்துகிறார்கள். IBT மூலமாக Book Stall அமைக்கப்பட்டு IBT-இன் இலக்கியப் புத்தகங்கள் பலமொழி வேதாகமங்கள் (தமிழ், ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி, கன்னடம்) மற்றும் சில பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டன. இதே நாளில் நெய்வேலியிலுள்ள ALC-சபையில் மிஷனெரிகளின் கூடுகை அனுசரிக்கப்பட்டு, இச்சபை மூலமாக தாங்கப்படும் மிஷனெரிகளை அந்நாளில் அழைத்து, அவர்கள் செய்யும் பணிகளை, மிஷனெரிகள் ஆராதனையில் விளக்கிக் கூறினார்கள். IBT-யில் பாகேலி மிஷனெரியாக மத்தியப் பிரதேசம் காரா–ரேவா–பணித்தளத்தில் பணிபுரியும் சகோ. சீனிவாஸ் சாக்கட் மற்றும் IBT-இன் பணித்தள இயக்குனர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்களும் பங்குபெற்றார்கள்.

IBT ஊழியர்களை ஒவ்வொரு மாதமும் காணிக்கையினால் தாங்கி வருகிற இவ்விரு சபை போதகர்கள், செயலர், பொருளர், சபை மக்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

இதே மாதம் 21–ஆம் தேதியன்று மேட்டூரிலுள்ள ஷ்லோவாம் சபையில் காலை 8.30 மணி ஆராதனையில் சகோ. எஸ்றா காலேப் அவர்கள் தேவ செய்தியும், சகோ. ஜெய்சிங் அவர்கள் IBT ஊழிய விளக்கமும் கொடுத்தார்கள். இதே நாளில் 10.00 மணி ஆராதனையில் ஞானக்கண்மலை சபையில் சகோ. கிதியோன் அவர்கள் தேவ செய்தியும், திருமதி. நவமணி சேகர் அவர்கள் IBT ஊழிய விளக்கமும் கொடுத்தார்கள்.

சந்தர்ப்பம் அளித்து, காணிக்கை கொடுத்த இரண்டு சபை போதகர்கள், சபை மூப்பர்கள், பங்கு பெற்ற சபை மக்கள் அனைவருக்கும் IBT நன்றியைத் தெரிவிக்கிறது.

இவ்வருடத்தில் மீதமுள்ள மாதங்களிலும் முன்னேற்றப் பணிகள் செய்ய சந்தர்ப்பம் கிடைக்கவும், மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் பணிகளை விவேகத்துடன் துரிதமாய் முடிக்க ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து, வழிநடத்த ஜெபிக்கிறோம்.

ஷாலோம்!

கர்த்தருக்குள் அன்பான
உங்கள் சகோதரன்
**K. ஜெய்சிங்**

# எமது தரிசனமும், எமது பணியும்

**<u>எமது தரிசனம் :</u> "இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"**

**<u>எமது பணி :</u> கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.**

# பணித்தளச் செய்திகள்

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. கடா மண்டல்</u>
<u>மொழி : சோரா</u>
<u>பணித்தளம் : பரலக்காமண்டி (ஓடிஷா)</u>

தேவ நாமம் மகிமைப்படுவதாக!

கர்த்தரின் கிருபையினால் கடந்த மாதம் என் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு பகுதியிலுள்ள புத்தகங்களில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலருடைய நடபடிகள், ரோமர், 1 கொரிந்தியர் ஆகிய புத்தகங்களில் சரிபார்ப்புப் பணி மேற்கொள்ளப் பட்டது. இதில் எழுத்துப்பிழை, திருத்தம், ஒத்துவராத வார்த்தைகள், வாக்கியங்கள், விடுபட்ட வார்த்தைகள் சரிசெய்யப்பட்டன. இவை பாராடெக்ஸ்ட்டில் செய்யப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமையன்று மர்குடா ஆலயத்திற்குச் சென்று அங்குள்ள ஊழியர்கள் திரு. ஜெரேமியா ரைட்டா மற்றும் மூப்பர்கள் திரு. சினான்-ரைட்டா, திரு. இட்னா சபேரா ஆகியோரைச் சந்தித்தேன். அன்று அச்சபையில் தேவ செய்தியைப் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் கொடுத்தார்கள். அப். 1 : 8, லூக்கா 24 : 49, யோவான் 14 : 1-2 மற்றும் ரோமர் 8 : 9, 14 வசனங்களின் அடிப்படையில் தேவ செய்தியளித்தேன். அதன்பின் விசுவாசிகளுக்காகவும், அவர்கள் ஒற்றுமை மற்றும் தேவைகளுக்காகவும் ஜெபித்தேன்.

இரண்டாம் சனிக்கிழமை உபவாச ஜெபக்கூட்டம் மற்றும் Google Meet Prayer-இலும் தேவ செய்தியளித்தேன். இதில் IBT ஊழியத்திற்காகவும், ஊழியத்தில் பணிபுரியும் அனைவருக்காகவும் சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்பட்டன. என் மொழிபெயர்ப்புப் பணிக்காக விசேஷமாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

---

<u>முன்னேற்றப் பணியாளர் : சகோ. G.N. சுந்தர்</u>
<u>பணித்தளம் : தஞ்சாவூர் (தமிழ்நாடு)</u>

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

என் முன்னேற்றப் பணிக்காக கடந்த மாதம் தஞ்சாவூரிலுள்ள A.G. கார்டன், மங்களாபுரம், LIC விரிவாக்கம் தெரு, பிரதான சாலை, பாலாஜி நகர், சுந்தரம் நகர், முருகன் நகர், கணபதி நகர், புது பஸ்டாண்டு ரோடு, ஈஸ்வரி நகர், பொன் நகர், R.H.M. காலனி, சன்னதி தெரு, ஆலமரத் தெரு, சர்ச் ரோடு, சன்னதி தெரு, சூலமரத் தெரு, அம்பாள் காலனி, சன்னதி தெரு, வானகரத் தெரு, ராம்நகர், கீரைக்காரத் தெரு ஆகிய இடங்களில் முன்னேற்றப் பணி செய்யப்பட்டன. தஞ்சாவூர் முடித்த பின் புதுக்கோட்டைக்குச் சென்று அங்குள்ள IBT பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து IBT-க்குரிய காணிக்கைப் பெற்று, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். புதுக்கோட்டையில் தாங்குநர்களைச் சந்தித்த இடங்கள் : மாப்பிள்ளையன்குளம், வடக்கு 3-ஆம் வீதி, TELC சர்ச் பின்புறம், செல்லம்மா நகர், பெக்ஷர் நகர், கணேஷ் நகர், தைல நகர், சாந்தம்மா நகர், சண்முகநாதன் நகர். பல வருடங்களாகத் தொடர்ந்து காணிக்கைக் கொடுத்து ஊழியத்திற்கு உதவிக்கரம் கொடுக்கும் தாங்குநர்களுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். நீங்களும் இவர்கள் குடும்பத்திற்காகவும், என் ஊழியப் பணிக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

---

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. கிறிஸ்துதான்</u>
<u>மொழி : தெஷியா</u>
<u>பணித்தளம் : பொண்டுகுடா (ஓடிஷா)</u>

தேவ நாமம் மகிமைப்படுவதாக!

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பாகத்தில் லேவியராகமம், எண்ணாகமம், யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், 1 சாமுவேல் ஆகிய புத்தகங்களில் ஒத்த வாக்கியம் சரிபார்ப்புப் பணி செய்யப்பட்டன. புதிய ஏற்பாட்டில் மத்தேயு நற்செய்திப் புத்தகம் அதி. 1 முதல் அதி. 28 வரை சரிபார்ப்பு செய்யப்பட்டது.

மிஷனெரிப் பணியில் ஞாயிறு ஆராதனை பொண்டுகுடா, மற்றும் குவாலி பணித்தளங்களில் நடத்தப்பட்டன. கர்த்தரின் சத்திய வார்த்தைகள் அவர்களுக்குப் போதிக்கப்படுவதினால், சபை மக்கள் கர்த்தருக்குள் வளருகிறார்கள். பொண்டுகுடா சபையில் 40 பேர்களும், குவாலி

பணித்தளத்தில் 20 விசுவாசிகளும் ஆராதனையில் பங்கு பெறுகிறார்கள். இவர்கள் மிக உற்சாகத்துடனும், வாஞ்சையுடன் பங்கு பெறுகிறார்கள். இவர்களுக்கு புதிய தெஷியா மொழிப் பாடல்களைக் கற்றுக் கொடுத்தேன். சபை ஆராதனையில் இந்தப் பாடல்களை மிக உற்சாகத்துடன் பாடுகிறார்கள். குவாலி கிராமத்தில் தொழுது கொள்வதற்கு ஆலயம் தேவைப்படுகிறது. இதற்காக பாரத்தோடு ஜெபியுங்கள். என் மொழிபெயர்ப்புப் பணிக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

--------------------

**மிஷனெரி : சகோ. சம்பத்குமார்**

**பணித்தளம் : பொதர்காம் (ஒடிஷா)**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த மாதம் மிஷனெரி பணிக்காக சுரவாண்டி, செலிப்பாடாக் கனகுடா, பனுவகுடா, மிர்மிண்டா, தெலிகுடா மற்றும் சில கிராமங்களுக்குச் சென்று, பலரைச் சந்தித்து, நற்செய்தியை அறிவித்து, தெஷியா கைப்பிரதி, நற்செய்திப் புத்தகங்கள் விநியோகம் செய்து, தேவைப்படுபவர்களுக்காக ஜெபித்து வந்தேன். சகோ. பாசல், பத்ராஜ், தாமு, போதிராம், பாஷக், டேனியேல் மோட்டு, நீலம், பிரகாஷ் ஆகியோர் மிக வாஞ்சையுடன் கேட்கிறார்கள்.

ஞாயிறு ஆராதனை, சிறுவர்களுக்கு ஞாயிறு பாடசாலை, உபவாச ஜெபக்கூடுகை என் பணித்தளம் பொதர்காமில் நடத்தப்பட்டன. என் சபை மக்களுக்காகவும், என் மிஷனெரிப் பணி தடையின்றி நடக்கவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## உலகச் செய்திகள்

1. அமெரிக்க அதிபரின் விமானப்படையான ஏர் ஃபோர்ஸ் ஒன் சேவையில் விரைவில் இணைக்கப்படவுள்ள கத்தார் பரிசளித்த புதிய விமானத்தை அதிபர் டிரம்ப் அறிமுகப்படுத்தினார்.
2. அமெரிக்காவின் கடும் பொருளாதார, தடைகளை எதிர்கொள்ளும் கியூபாவில், சோஷலிச பொருளாதாரத்தில் மாற்றங்களைப் புகுத்தி பல்வேறு துறைகளைத் தனியார் மயமாக்குவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க மசோதாவுக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒருமனதாக ஒப்புதல் அளித்துள்ளது.
3. **எப்சன் ஈகோடேங்க் பிரிண்டர்கள்:** எப்சன் இந்தியா நிறுவனம் வீடு மற்றும் சிறு தொழில் நிறுவனப் பயன்பாடுகளுக்காக ஒரே நேரத்தில் **15 புதிய ஈகோடேங்க் இங்க் ஜெட் பிரிண்டர்களை** அறிமுகம் செய்துள்ளது. இவற்றின் விலை ரூ. 13,999 முதல் 24,999 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
4. ஜப்பான் ஒத்துழைப்புடன் இந்தியாவில் 1000 உயிரி எரிவாயு மற்றும் இயற்கை உரங்கள் உற்பத்தி ஆலைகள் அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதேபோல், அதிநவீன ராணுவ தளவாடங்களைக் கூட்டாகத் தயாரிக்க இருநாடுகளும் முதல்முறையாக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.
5. ஐரோப்பிய நாடுகளில் நிலவி வரும் கடும் வெப்ப அலை மற்றும் வறட்சி காரணமாக, தெற்கு பிரான்ஸில் உள்ள எல்லை வனப்பகுதிகளில் காட்டுத்தீ வேகமாகப் பரவி வருகிறது. 2,200 ஏக்கர் நிலங்கள் எரிந்து சாம்பல்.

## மிஷனெரி குழந்தைகளுக்குக் கல்வி நிதி

IBT இயக்கமானது ஒவ்வொரு ஆண்டும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறதை நீங்கள் அறிவீர்கள். 2026-27 ஆம் கல்வி ஆண்டிற்கு பிள்ளைகளின் படிப்பிற்காக உதவித் தொகை ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிறது. IBT பங்காளர்கள், சத்திய வார்த்தை வாசகர்கள் மற்றும் ஊழிய பாரம் கொண்ட அனைவரும் மனமுவந்து உற்சாகத்துடன் நிதி உதவி வழங்கி பிள்ளைகளின் படிப்பிற்கான செலவுகளைத் தாங்க முன் வாருங்கள்.

– பொருளாளர், IBT

# தேவை

சென்னையிலே பணிபுரியும் முன்னேற்றப் பணியாளருக்கு 1 இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது. தற்போதுள்ள பழைய வாகனத்தின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 1,10,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

---

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **STATE BANK OF INDIA**
   - A/c. No. : 30008395600
   - Name : Indian Bible Translators
   - Branch Code : 7231
   - Branch : Peelamedu
   - IFS Code : SBIN0007231

2. **INDIAN BANK**
   - A/c. No. : 475742259
   - Name : Indian Bible Translators
   - Branch Code : S107
   - Branch : Peelamedu
   - IFS Code : IDIB000S107

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

---

# கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- | 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- | 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 100/- | 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- | 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- | 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- | 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- | 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- | 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

---

# வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பலரின் கோரிக்கையை ஏற்று, “சோர்வும் தீர்வும்” புத்தகம் 6-வது பதிப்பு அச்சிடப்பட்டு, IBT அலுவலகத்தில் விற்பனைக்கு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் தற்போதைய விலை ரூ. 100/-. தேவைப்படுவோர் IBT அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

– ஆசிரியர்

# துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. கடபா மற்றும் போண்டாபொர்ஜா மொழிகளில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகளின் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, தற்போது குழு சரிபார்ப்புப் பணிகள் நடந்து வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இப்பணி சரிவர செய்யப்பட்டு முடிக்கவும், அதன்பின் பேஜ் செட்டிங் பணி ஆரம்பிக்கப்படவும் ஜெபிப்போம்.

2. வேதாகமம் வெளியிட திட்டமிட்டிருக்கும் போஜ்புரி மொழியில் குழு சரிபார்ப்பு நடந்து வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள். மிர்கான், கலகாண்டியா, தெஷியா ஆகிய மூன்று மொழிகளிலும் இதர பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு குரூப் செக்கிங் ஆரம்பிக்கப்படவும், புதிய ஏற்பாடு புத்தகத்துடன் சங்கீதம், நீதிமொழிகள் இணைத்து வெளியிடத் திட்டமிட்டுள்ள டிங்கால், குடுக், பாகேலி, பண்டேலி, சோரா, குவி, சித்தி ஆகிய 7 மொழியின் குரூப் செக்கிங் பணிகள் தாமதமின்றி ஆரம்பிக்கப்படும்படியாக இதர பணிகள் முடிக்கப்பட ஜெபியுங்கள்.

3. 2027-ற்கான நாள்காட்டி ஆயத்தப் பணிகள் முடிக்கப்பட்டு பிரஸ்ஸிற்கு அனுப்பப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இப்பணி தாமதப்படுத்தாமல், பிழைகள் இல்லாமல் அச்சிடப்பட்டு அலுவலகம் அனுப்பப்பட ஜெபியுங்கள்.

4. IBT அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் சகோ. சைமன் அவர்களின் மகன் அடோனிஸ் கேப்ரியேல் (வயது-5) தற்போது அடிக்கடி வரும் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பரிசோதனையில் ரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக உள்ளதாக கூறுகிறார்கள். அடிக்கடி வரும் காய்ச்சல் வராமலிருக்கவும், கர்த்தர் இக்குறைவை இக்குழந்தைக்கு மாற்றி, பரிபூரண சுகத்தைக் கொடுத்து, தன் பள்ளிக்கு ஆரோக்கியத்துடன் சென்று வரவும், இதனால் மனவருத்தத்தில் உள்ள பெற்றோரின் கவலை நீங்கவும் ஜெபிப்போம்.

**SEND ALL YOUR CONTRIBUTIONS**

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 3527370
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**

## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of — **Mr. K. JAISINGH**, **WORD PUBLISHERS TRUST**, 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Printed by — **Mr. C.K. VENKATESH**, Chandra Prabha Press, 113-118, V.H. Road, CBE-1.


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code**-ஐ **SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

A/c. No. : 1630413107
Name : Word Publishers Trust
Branch : Kalapatti
IFS Code : CBINO282057

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd August 2026
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**